# ஆபிரகாமைப் போல சிறுவர்கள் இயேசுவை நம்புகின்றனர்

**ஜெபம்:** "பரலோகத்தில் இருக்கும் அன்புத் தந்தையே, சிறுவர்களிடம் விசுவாசத்தைக் கட்ட இந்தப் பாடத்தைப் பரிசுத்த ஆவியின் பலத்தால் உபயோகிப்பீராக. உண்மையான நம்பிக்கையோடும், இதய பூர்வமான பக்தியோடும் அவர்கள் தினமும் ஜெபிக்க உதவுவீராக. இயேசுவின் நாமத்தில், ஆமென்."

குழந்தைகளின் வயதுக்கும் தேவைக்கும் ஏற்ற **செயல்பாடுகளைத்** தெரிந்து கொள்க:


ஆபிரகாமின் விசுவாச வாழ்க்கையில் இருந்து பின்வரும் முக்கிய நிகழ்ச்சிகளை **தொகுத்துக் கூறவும்:**

1) **ஆபிரகாம் விசுவாசத்தால் பயணம் செய்தான்.** ஆபிரகாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்தான். அவன் தன்னுடைய பணக்கார ஆனால் விக்கிரகங்களை வணங்கிய நாட்டை விட்டு வந்தான். ஏனெனில் அவன் தேவனை நம்பினான். அவன் தெரியாத தொலைதூர நாடு ஒன்றுக்குத் தன் குடும்பத்தோடு பயணம் செய்தான் (ஆதி. 12).

2) **ஆபிரகாம் விசுவாசத்தோடு தாராளமாய்க் கொடுத்தான்.** மாடுகளையும், ஆடுகளையும் நல்ல நிலத்தில் மேய்ப்பது குறித்து ஆபிரகாம் மற்றும் லோத்தின் மந்தை மேய்ப்பர்களுக்கும் இடையில் தர்க்கம் ஏற்பட்டது. இதைத் தவிர்க்க, தேவனை நம்பிய ஆபிரகாம், நல்ல நிலத்தை லோத்துக்கு விட்டுக் கொடுத்தான். லோத்து சுயநலமாக நல்ல நிலத்தைத் தெரிந்து எடுத்தான். ஆனால் தேவன் ஆபிரகாமை ஆசீர்வதித்தார்.

3) **விசுவாசத்தோடு ஆபிரகாம் தைரியமாக யுத்தம் செய்தான்.** லோத், சோதோம் என்ற விக்கிரக ஆராதனையாளர்களின் பணக்கார நாட்டைத் தெரிந்து கொண்டான். ஒரு நாள் ஐந்து மோசமான அரசர்கள் சோதோமைப் பிடித்து மக்களையும் அவர்களது விலை உயர்ந்த உடமைகளையும் கொண்டு சென்றனர். இருந்தாலும், ஆபிரகாமும் அவனது வேலைக்காரர்களும், அந்த ஐந்து அரசர்களைத் தோற்கடித்து, லோத்துவின் குடும்பத்தையும் மற்ற மக்களையும் மீட்டு வந்தனர். அதனால், சோதேமின் அரசன், மக்களை விட்டு விட்டு பொருட்களை எல்லாம் எடுத்துக் கொள்ளுமாறு கெஞ்சினான். ஆபிரகாம் பொருட்களையும் மக்களையும் அரசனுக்குத் திருப்பிக் கொடுத்தான் (ஆதி. 14).

- எல்லா நட்சத்திரங்களையும் எண்ணுவதற்கு எவ்வளவு நேரம் பிடிக்கும் என்று பிள்ளைகளைக் கேட்கவும். ஆபிரகாமின் சந்ததி திரளாய் இருக்கும் என்று தேவன் அவனுக்கு செய்த வாக்குத்தத்தம் எவ்வளவு பெரியது என்று விளக்கவும்.
- தனியாகவும், முடிந்தால் குடும்பத்தோடும், தினமும் ஜெபிக்க வேண்டும் என்று பிள்ளைகளுக்குக் கூறுங்கள்.



4) **ஆபிரகாம் தேவனுடைய வாக்குத்தத்தத்தை நம்பினான்.** தேவன் ஒரு நித்திய உடன்படிக்கையை ஆபிரகாமோடு ஏற்படுத்தினார். அவனுடைய சந்ததியின் மூலம் எல்லா ஜனங்களையும் ஆசீர்வதிப்பதாக உறுதி அளித்தார் இதன் அர்த்தம் என்னவென்றால் ஆபிரகாமுக்கு ஒரு வழித்தோன்றல் (descendant) உருவாவார் என்பதே. ஆனால் அவனுடைய மனைவியோ குழந்தை பெறும் பருவத்தைத் தாண்டிய மூதாட்டியாக இருந்தாள். ஒரு நாள் தேவன், ஆபிரகாமை நோக்கி நட்சத்திரங்களை அண்ணாந்து நோக்குமாறு கூறினார். அவன் பார்க்கும், நட்சத்திரங்களைப் போல அவன் சந்ததி பெருகும் என்று தேவன் வாக்கருளினார். ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான். அவர் அவனுடைய விசுவாசத்தை நீதியாக எண்ணினார். சாராள்

ஈசாக்கைப் பெற்றாள். இவ்வாறு தேவன் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினார். இந்நாள் வரையிலும் ஆபிரகாமின் சந்ததியில் வந்த இயேசுவின் மூலம் உலகத்தின் எல்லா ஜனங்களையும் தேவன் ஆசீர்வதித்துக் கொண்டே இருக்கிறார் (ஆதி. அதி. 15, 17 & 21).



**உலகத்தின் எல்லா தேசங்களும்**

5) **ஆபிரகாம் விசுவாசத்தோடு ஜெபித்தான்.** ஒரு நாள் கர்த்தருடைய தூதன், பொல்லாத சோதோம் பட்டிணத்து மக்களை அழிக்கப்போவதாக ஆபிரகாமிடம் கூறினார். ஆபிரகாம் சோதோமில் வாழ்ந்த லோத்தையும் அவன் குடும்பத்தையும் காக்குமாறு வேண்டினான். ஆபிரகாமின் விசுவாசத்தின் காரணமாக அவர்களைக் காக்க தேவன் தூதர்களை அனுப்பினார். பின் வானத்தில் இருந்து அக்கினியை மழைபோல் பொழிந்து சோதோமை முற்றிலுமாக அழித்தார். (ஆதி. அதி. 18-19).

6) **இருதயத்தை நொறுக்கும் ஒரு தேவ கட்டளைக்கு ஆபிரகாம் விசுவாசத்தினால் கீழ்ப்படிந்தான்.** ஒருநாள் தேவன், ஆபிரகாமின் விசுவாசத்தை சோதிக்க எண்ணினார். எனவே அவனுடைய ஒரே குமாரனாகிய ஈசாக்கைப் பலியிடும்படி கூறினார். இவன் மூலமாகவே தேவனுடைய வாக்குத்தத்தம் எல்லாம் நிறைவேற வேண்டியதாய் இருந்தது. ஆபிரகாம் குழந்தையைப் பலியிட தயாராய் இருந்தான். ஏனெனில் அவனை மீண்டும் உயிரோடு எழுப்ப தேவன் வல்லவர் என்பதை அவன் அறிந்திருந்தான். திடீரென ஈசாக்குக்குப் பதிலாகப் பலியிட தேவன் ஒரு ஆட்டைத் தந்தார் (ஆதி. அதி.22 ; எபிரேயர் 11:17-19).

7) **ஆபிரகாமின் நற்செயல்கள் அவனுக்கு மாபெரும் விசுவாசம் இருந்தது என்பதைக் காட்டின.** தேவன் ஆபிரகாமுடைய விசுவாசத்தை நீதியாக எண்ணி, அவனுடைய விசுவாசத்தின் காரணமாக அவனை ஆசீர்வதித்தாரே ஒழிய அவனுடைய நற்காரியங்களுக்காக அல்ல. ஆபிரகாமுடைய விசுவாசமே நற்செயல்கள் புரியுமாறு அவனை வழிநடத்தின (யாக். 2:21-24).


**நான்கு பெரிய பிள்ளைகளிடம்** விசுவாசத்தை சித்தரிக்கும் நான்கு பொருட்களை கண்டு பிடித்து வருமாறு சொல்லவும். முடியாவிட்டால் நான்கு பொருட்களின் படங்களை வரையவும்.

**ஒரு சலவைக்கட்டி** (A bar of Soap)

**ஒரு கத்தி**

**ஒரு குப்பி** (அல்லது மாத்திரை)

**ஒரு சிலுவை** (இரண்டு குச்சிகளை இணைத்துக் கட்டியது)



இரண்டு குச்சிகளைக் கட்டி சிலுவையை உண்டாக்குக

- **முதல் பிள்ளை:** சோப்பைக் காட்டி கேட்பது "நாம் நமது பாவத்தை சோப்பால் கழுவ முடியுமா?" குழந்தைகளே பதில் கூறட்டும்.)
- **இரண்டாவது பிள்ளை:** கத்தியைக் காட்டி கேட்பது "டாக்டர்கள் நமது பாவத்தைக் கத்தியால் வெட்டி எடுக்க முடியுமா?"
- **மூன்றாவது பிள்ளை:** பாட்டிலைக் காட்டி கேட்பது "நமது பாவத்தை குணமாக்க மருந்து எடுத்தால் முடியுமா?"
- **நான்காவது பிள்ளை:** சிலுவையைக் காட்டி கேட்பது "நமது பாவத்தை எது போக்கும்?"

**விளக்கம்:** "சிலுவையின் மேல் சிந்தப்பட்ட இயேசுவின் இரத்தமே நமது பாவத்தைக் கழுவுகிறது. நாம் இயேசுவை நம்ப வேண்டும். அவர் நமது பாவங்களை மன்னித்து, நித்திய வாழ்வை அளிக்கவே மரித்து உயிர்த்தெழுந்தார்."

ஆபிரகாமின் கதையின் பகுதிகளை நாடகமாக்குக. சபைத் தலைவரோடு பேசி நாடகத்தை நடித்துக் காட்டவும், மேலே குறிப்பிட்டுள்ள நான்கு உதாரணங்களை விளக்கவும் ஏற்பாடு செய்க.

- **தேவ குரல், ஆபிரகாம்** ஆகிய வேடங்களைப் பெரியவர்கள் ஏற்கவும்.
- **சாராள், வேலைக்காரர்கள்** ஆகிய வேடங்களை **சிறுவர்கள்** ஏற்கவும்.

**தேவ குரல்:** "ஆபிரகாமே! நீ என்னை விசுவாசித்ததால் உன் சந்ததியை வானத்து நட்சத்திரத்தைப் போல நான் பெருகப் பண்ணுவேன்."

**ஆபிரகாம்:** வானத்தை அண்ணாந்து பார்க்கிறான். "நட்சத்திரங்களை என்னால் எண்ண முடியவில்லை. எல்லாம் வல்ல தேவனே, நான் உம்மை நம்புகிறேன். உம்மால் செய்ய முடியாத காரியம் ஒன்றுமில்லை."

**தேவ குரல்:** "நீ என்னை விசுவாசித்த காரணத்தால் நான் உன்னை நீதிமானாக எண்ணுகிறேன். நான் உன்னை ஆசீர்வதிப்பேன். உன் வம்சத்தில் வரும் ஒருவர் மூலமாக இந்த உலகத்து ஜனங்களை எல்லாம் ஆசீர்வதிப்பேன்."

**ஆபிரகாம்:** "ஆனால் எனக்கு குழந்தைகள் இல்லை. மேலும் என் மனைவி சாராள் குழந்தை பெற்றுக் கொள்ளும் வயதைத் தாண்டிவிட்டாளே!"

**தேவகுரல்:** "என்னை விசுவாசி. சாராள் ஒரு குழந்தைக்குத் தாயாவாள்."

**ஆபிரகாம்:** சாராளிடம் சென்று கூறுகிறான். "உனக்கு ஒரு பிள்ளை பிறக்கும் என்று தேவன் கூறுகிறார்."


**சாராள்:** நகைத்துப் பின் வேலைக்காரரிடம் கூறுகிறாள், "என் கணவர் கூறியதைக் கேட்டீர்களா. எனக்கு ஒரு பிள்ளை பிறக்குமாம்."

**வேலைக்காரர்கள்:** சிரித்துவிட்டு இவ்வாறு கூறுகிறார்கள். "குழந்தை பெறும் வயதை நீங்கள் கடந்து விட்டீர்கள்." "இப்படி ஒரு வாக்குறுதியை ஆபிரகாம் கொடுக்க; அவர் தம்மை யார் என்று எண்ணிக் கொள்ளுகிறார்?" "இது ஒரு நல்ல வேடிக்கை."

**ஆபிரகாம்:** கேட்டுக் கொண்டு இருக்கும் எல்லோருக்கும் கூறுகிறான், "தேவன் தமது வாக்குறுதியைக் காத்தார். அவர் ஓர் அற்புதம் செய்தார். சாராள் ஈசாக்கைப் பெற்றாள். ஈசாக்கின் வம்சத்தில் வரும் ஒருவர் மூலமாக உலகத்தின் ஜனங்கள் எல்லாம் ஆசீர்வதிக்கப்படுவார்கள். இவரே இயேசு." (நாடகத்தை அரங்கேற்ற உதவிய யாவருக்கும் நன்றி கூறுக).

**குழந்தைகள்** ஒரு எரிமலையின் படத்தை வரையட்டும். பெரிய பிள்ளைகள் சிறுவர்களுக்கு உதவட்டும். படத்தை ஆராதனையின் போது பெரியவர்களுக்குக் காட்டி விளக்க வேண்டியது:

- எரிமலைகள், குழம்பைக் கொட்டி பலரை கொன்று விடுகின்றன. இது போலவே வானத்து அக்கினி பொல்லாத சோதோம் மக்களை அழித்தது.
- ஆபிரகாம், லோத்தின் குடும்பம் தீயில் இருந்து தப்ப ஜெபித்தது போல இயேசுவை அறியாத மக்களுக்காக நாம் ஜெபிக்க வேண்டும்.



**சங்கீதம்:** சங். 34, வசனங்கள் 4, 7, 8, 9 ஐ நான்கு சிறுவர்கள் ஒப்புவிக்கட்டும். ஆபிரகாம் மற்றும் அவன் ஜெபத்தைப் பற்றி பெரிய பிள்ளைகள் பாடலோ கவிதையோ எழுதட்டும்.

**மனப்பாடம்:** எபி. 11:1.

**ஜெபம்:** "கர்த்தாவே, நீர் எங்களுக்கு அளித்த வாக்குறுதிக்கு நன்றி. நீர் சொன்ன எல்லாவற்றையும் செய்யும்படி நாங்கள் உம்மை நம்புகிறோம். ஆபிரகாமைப் போன்ற விசுவாசத்தோடு நாங்கள் உம்மை நம்புகிறோம். அவன் செய்தது போல நாங்களும் பிறருக்காக ஜெபிக்க எங்களுக்கு உதவுவீராக."

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net